# சித்தர்களின் நிலையாமை தத்துவங்கள் கூறும் இலக்கியங்கள்

**வீ.கோவிந்தராஜ்,**
**தொல்லியல்ஆய்வாளர்,**
**கரூர்**

52

**ஆய்வுச்சுருக்கம்**

சித்தர்கள் நிலையாமையை வாழ்க்கையில் உணர்ந்தனர். அவற்றை மக்களுக்கு உணர்த்தினர். மனித வாழ்க்கை நிலையானது இல்லை. இழந்து விட்ட காலம் திரும்பிப் பெற முடியாது. அதுபோலவே தான் உயிரும். உயிரோடு இருக்கின்ற நாட்களில் அறச்செயல்களை மேற்கொள்ள வேண்டும். அறத்தை மேற்கொண்டால் மனிதனுக்குப் புகழ் வந்து சேரும். சித்தர்களின் நிலையாமை தத்துவங்கள் பிற இலக்கியங்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றை எடுத்துக் கூறும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்**

சித்தர்கள், நிலையாமை, இறப்பு, யாக்கை, வாழ்க்கை

**முன்னுரை**

இந்த உலகில் எதுவும் நிரந்தர ம்இல்லை. ஒன்று அழிந்தால் மற்றொன்று உருவாகிறது. மனிதர்களின் கண்டு பிடிப்புகள் மாற்றத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றன. மனிதன்அடிப்படைத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்து கொண்டு வாழப் பழகிக்கொள்ளவேண்டும். ஆசையின்றி வாழ்தல் மிகச்சிறந்த வாழ்க்கை ஆகும். இந்த உலகில் புறத்தோற்றத்தில் காண்பவைகள் அனைத்தும்மாயை என்பதை அகத்தோற்றத்தில் மனம் உணர வேண்டும். இந்த உடல் வெறும் கூடு போன்றது. உயிரானது பல அணுக்களைக்கொண்டு ஐம்புலன்களின் செயல்பாடுகளால் இயங்கிக்கொண்டு வருகிறது. இன்று கண் முன்பு இருப்பது நாளை இல்லாமல் மறைந்து போகிறது. இத்தகைய நிலையாமை பற்றிய செய்திகளைப் பல்வேறு இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சித்தர்கள்தவம், தியானம் இவற்றால் பல புதிய சிந்தனைகளைக் கொண்டு வந்தனர். இவை வாழ்வியலுக்கு அடிப்படை ஆகும். குண்டலகேசியில் நிலையாமை

**போதர உயிர்த்த ஆவி**
**புக உயிர்க்கின்ற தேனும்**
**ஊதியம் என்று கொள்வர்**
**உணர்வினால் மிக்க நீரார்**
**ஆதலால் அழிதல் மாயைப்**
**பொருள்களுக்கு அழிதல் வேண்டா**
**காதலால் அழுதும் என்பார்**
**கண் நனிகளையல் உற்றார்**

**(நாதகுத்தனார், குண்டலகேசி, பாடல்எண் 7)**

உள்ளும் புறமும் சென்று வரும் உயிர்மூச்சு உடம்பின்உள்ளே சென்று மனிதர்களை உயிர்க்க வைக்கின்றது. இப்படி உயிர் மூச்சு இயங்க வாழ்வதைப் பெரும் பேறு எனக் கொள்வார்கள் பெரியோர்கள். யாக்கை என்பது அழிதல் இயற்கை. அப்படி அழிந்துபட்டால் உணர்வுக்கு ஆட்பட்டு வருந்தும் தன்மை உடையவர்கள் அதன் மேல் வைத்த பற்றால் வருந்தி அழுவார்கள். அப்படி அழிந்து படும்மாயப் பொருளான யாக்கையின் மாயையை உணர்ந்து கற்றறிந்த பெரியோர்கள் அதன் கண் எழும்பும் ஆசையை விட்டொழிப்பார்கள். அழியும்மாயப் பொருளான உடல் மேல்வைக்கும் ஆசையைப் பற்றறுக்கக் கூறுகிறது இப்பாடல். யாக்கை நிலையானது அல்ல. அது அழியக் கூடியது என்பதைச் சாமானியர் உணராமல் அதன் மேல் கொண்ட பற்றால் அழுவர். சான்றோரோ யாக்கையின் நிலையாமையை உணர்ந்து அதன் மேல் பற்றை ஒழிப்பார்கள். மனிதர்களிடத்தில் ஒரு காலத்திலும் எமன் இரங்க மாட்டான். இரக்க மற்ற அந்தக் கூற்றுவனிடம் இருந்துயாராலும் தப்பிக்க முடியாது.

**கோள்வலைப்பட்டுச்சாவாம்**
**கொலைக்களம்குறித்துச்சென்றே**
**மீளினும்மீளக்காண்டும்**
**மீட்சிஒன்றானும்இல்லா**
**நாள்அடிஇடுதல்தோன்றும்**
**நம்முயிர்பருகும்கூற்றின்**
**வாளின்வாய்த்தலைவைப்பாக்குச்**
**செல்கின்றோம்வாழ்கின்றோமா**

**( நாதகுத்தனார்,குண்டலகேசி,பாடல்எண் 10)**

ஒருவனுக்குச் சிறைத் தண்டனை கிடைத்து இறப்பு நேரலாம். அல்லது கொலைக்களம் வரை கொண்டு செல்லப்பட்டு மீண்டும் கொல்லப்படாமல் தப்பி உயிரோடு திரும்பி வந்தாலும் வரலாம்.

அப்படித் தப்பி மீண்டு வந்தது கண்டும் தப்பிக்கவே முடியாத படி நாளுக்கு நாள் ஒவ்வொரு அடியாக வைத்து நம்மை நெருங்கி நம்முடைய உயிரைப் பறித்துச் செல்லும் எமனின் கூர்மையானவாளுக்கு இரையாகத் தலையைக் கொடுத்துச் செல்கின்றோம். நாம் உண்மையில் வாழ்கின்றோமா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். வாழ்வின் நிலையாமை குறித்துக் கூறும் பாடல் ஆகும். சாகும் நாட்கள் தெரிந்தால் வாழ்கிற நாட்கள் நரகம் ஆகி விடும் என்கின்றனர் சான்றோர். மனிதன் மனிதனையும் உயிர்களையும் தண்டித்தால் கடவுள் மனிதனைத் தண்டிப்பார். தலைக்கு மேல் கத்தி இருக்கிறது என்று கிராமங்களில் சொல் வழக்கு வழங்குவது உண்டு.

**நன்கணம்நாறும்இதுஎன்றுஇவ்**
**உடம்புநயக்கின்றதுஆயின்**
**ஒன்பதுவாயில்கள்தோறும்**
**உள்நின்றுஅழுக்குச்சொரியத்**
**தின்பதுஓர்நாயும்இழுப்பத்**
**திசைதொறும்சீப்பில்குபோழ்தின்**
**இன்பநல்நாற்றம்இதன்கண்**
**எவ்வகையால்கொள்ளலாமே**

**(நாதகுத்தனார், குண்டலகேசி, பாடல்எண்: 11)**

மனிதர்கள் உடம்பு மணக்கின்றது என்று இவ்வுடம்பின் மேல் மயக்கம் கொண்டு விருப்பம் வைத்துள்ளார்கள். ஆனால் இந்த உடம்பில் உள்ள ஒன்பது கழிவு துவாரங்கள் வழியாக (இரண்டு கண்கள், மூக்கின் இரண்டுது வாரங்கள், இரண்டு காதுகள், வாய், சிறுநீர்த் துவாரம், மலத்து வாரம் ஆகியன ஒன்பது ஓட்டைகள்) உடம்பின் உள்ளிருந்து வெளிப்பட்டு வழிவது அழுக்கே ஆகும். இப்படிப்பட்ட உடலில் இருந்து உயிர் பிரிந்த பின் இதனைத் திசைதோறும் இழுத்துத் திரிந்து தின்னப்போவது நாய்களே. அப்படி அவை இழுத்துத் திரியும் போது இந்த உடலில் இருந்து வெளிப்படும் சீழ், குருதி போன்றவற்றைக் கண்டும் இந்த உடலில் இனிய மணம் வீசுகிறது என்று எண்ணி இதன் மேல் மயக்கம் கொள்வது நியாயம் இல்லை. உடல் இறந்த பிறகு துர்நாற்றம் வீசுகிறது. உடலின் நவதுவாரங்களில் இருந்து வெளிப்படுவது அருவருப்பு ஊட்டும் அழுக்குஆகும். அந்த அழுக்கினைப் போக்க வேதினமும் மனிதர்கள் குளிக்கின்றனர். ஆனால் அது உடலை விட்டுச் செல்வதில்லை. இப்படி அழிந்துபடும் உடலின் மீது பன்னீர், சவ்வாது, சந்தனம் போன்ற திரவியங்கள் பூசி மணக்கிறது என்று இன்ப விழைவு கொள்வது எத்தகைய நியாயம் என்று இப்பாடல் கேட்கிறது. யாக்கை நிலையாமை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**உறுப்புகள்தாம்உடன்கூடி**
**ஒன்றாய்இருந்தபெரும்பை**
**மறைப்பில்விழைவிற்குச்சார்வாய்**
**மயக்குவதேல்இவ்வுறுப்புக்**
**குறைத்தனபோல்அழுகிக்**
**குறைந்துகுறைந்துசொரிய**
**வெறுப்பில்கிடந்தபொழுதின்**
**வேண்டப்படுவதும்உண்டோ**

**(நாதகுத்தனார், குண்டலகேசி, பாடல்எண் 13)**

கை,கால், கண், காது, மூக்கு ,வாய், வயிறு ஆகிய உறுப்புகளால் ஆனது இந்த உடல் என்னும் பெரும்பை. இத்தனை உறுப்புகளையும் உள்ளே வைத்துத் தோலை வைத்து மூடி மறைத்து வெளியில் அழகான உடலாகத் தென்படுகிறது. ஆகையால் இது வெளித் தோற்றத்தால்

விரும்புவதற்கு ஏற்றதாகவும் வசீகரமாகவும் மனதை மயக்குவதாகவும் உள்ளது. இவ்வுறுப்புகள் உடலை விட்டு அறுபட்டுக் குறைந்தாலும் அல்லது இறப்பின் மூலம் அழுகினாலும் அல்லது நோய் வந்து அழுக்கும் சீழும் இரத்தமும் வடிந்து சிறிது சிறிதாக அழுகிக் குறையும் நிலை ஏற்பட்டாலும் வெறுத்து ஒதுக்கும் நிலைக்கு உள்ளாகும். அழுகக் கூடிய யாக்கையை விரும்ப வேண்டாம் என்கிறது இப்பாடல். உடல் உறுப்புகளால் ஆக்கப்படும் யாக்கையானது நோயாலோ அல்லது இறப்பாலோஅழுகி அழிந்து படும் நிலைக்கு ஆளாவது உறுதி. அழியும் இவ் உடலை வெறுத்துப் பற்றறுக்க வேண்டும் என்கிறது இப்பாடல்.

**எனதெனச்சிந்தித்தலால்மற்று**
**இவ்வுடம்புஇன்பத்துக்குஆமேல்**
**தினைப்பெய்தபுன்கத்தைப்போலச்**
**சிறியவும்மூத்தவும்ஆகி**
**நுனையபுழுக்குலம்தம்மால்**
**நுகரவும்வாழவும்பட்ட**
**இனையஉடம்பினைப்பாவி**
**யான்எனதுஎண்ணல்ஆமோ**

**(நாதகுத்தனார், குண்டலகேசி, பாடல்எண் 14)**

இந்த இனிய உடம்பே என்னுடைய இன்பத்துக்கு எல்லாம் காரண மென்றும் மற்றும் எனக்கே எனக்குரியது என்று சிந்திப்பதும் உச்சக்கட்டப் பேதமைத் தன்மை உடையதாகும். உயிர் நீங்கிய இவ்வுடம்பானது தினையரிசியால் சமைக்கப்பட்ட அரிசி சோற்றினைப் போல சிறிதும் பெரிதுமான கூரிய மூக்குடைய புழுக்கூட்டங்களால் தின்னப்படப் போகிறது. அவற்றால் உண்ணப் படவும் அவை வாழ்வதற்கும் இடமான இவ்வுடலைப் போற்றிப் பரவுதலும் யான் எனது என்று எண்ணுவதற்கும் என்ன பெருமை உள்ளது. ஒன்று மில்லை என்பது தான் கருத்தாகும். எனவே யாக்கை நமதல்ல என்று உணர வேண்டும். இவ்வுடம்பு என்னுடையது என்னும் மமதையால் இன்ப நுகர்ச்சியில் ஈடுபட்டு அவ்வுடம்பின் மீது பற்றுக்கொள்வது பேதமைத் தன்மை. எவ்வளவு தான் உண்டாலும் தினையரிசிச் சோற்றினைப் போன்ற புழுக்கள் உயிர் நீங்கிய இவ்வுடலை அரிக்கத்தான் போகின்றன. எனவே யாக்கை நிலையாமை ஆகும்.

**விவேக சிந்தாமணியில் நிலையாமை**

**அரும்புகோணிடில்அதுமணம்குன்றுமோ**
**கரும்புகோணிடில்கட்டியும்பாகுமாம்**
**இரும்புகோணிடில்யானையையும்வெல்லலாம்**
**நரம்புகோணிடில்நாமதற்குஎன்னசெய்யலாம் ?**

**(விவேகசிந்தாமணி, பாடல்எண் 23)**

மலரின் அரும்பு கோணலாக வளைந்து காணப்பட்டாலும், அது வெளியிடும் மணத்தில் குறையேதும் ஏற்படுவதில்லை. கரும்பு வளைந்து கோணலாக இருந்த போதிலும் அது பாகு

தயாரிக்கவும் வெல்லம் தயாரிக்கவும் பயன்படுகிறது. இரும்பு வளைந்து விட்டாலோ, அதைக் கொண்டு சங்கிலியோ அங்குசமோ செய்து, அவற்றைப் பயன்படுத்தி யானையைக் கட்டி வைக்கவும், அதை அடக்கி வைக்கவும் முடியும். ஆனால் மனித உடலில் இருக்கும் நரம்புகோணல் ஆகிவிட்டால் – அதாவது நரம்பு இழுப்பு ஏற்பட்டு விட்டால், அதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது, இறப்பு இயற்கையின் விதி என்று எண்ணிக் கொள்ள வேண்டும் என்கிறது இப்பாடல்.

**மூப்பிலாக்குமரிவாழ்க்கை**
**முனைஇலாஅரசன்வீரம்**
**காப்பிலாவிளைந்தபூமி**
**கரையிலாதுஇருந்தஏரி**
**கோப்பிலான்கொண்டகோலம்**
**குருவிலான்கொண்டஞானம்**
**ஆப்பிலாச்சகடுபோலே**
**அழியும்என்றுஉரைக்கலாமே (விவேகசிந்தாமணி, பாடல்எண் 37)**

முதியோரின் துணை இல்லாமல் வாழ்கின்ற குமரிப் பெண்ணின் வாழ்க்கை, விரைவில் அழிந்து விடும். போரில் முனைப்பும் கோபத்தையும் வெளிப்படுத்தாத அரசனது வீரமும் அழிந்து போகும். பாதுகாப்பு இல்லாத விளைச்சல் நிலம் பயன் தராமல் அழிந்து போகும். வலுவான கரை அமைக்கப்படாத ஏரி உடைந்து அழியும். உரிய பொருள் வரவு இல்லாதவனது ஆடம் பரச்செயல்கள் அழிந்து போகும். ஆசிரியர் இல்லாமல் பெற்ற கல்வி எந்தப் பயனும் இல்லாது போய் விடும். இவை எல்லாம் அச்சாணி இல்லாத வண்டி போல் அழிந்து போகும் என்று அறிய வேண்டும் என்கிறது இப்பாடல்.

**அரவினைஆட்டுவாரும்அருங்களிறுஊட்டுவாரும்**
**இரவினில்தனிப்போவாரும்எறியும்நீர்நீந்துவாரும்**
**விரைசெறிகுழவியானவேசையைவிரும்புவாரும்**
**அரசனைப்பகைத்திட்டாரும்ஆருயிர்இழப்பர்தாமே**

**(விவேகசிந்தாமணி, பாடல்எண் 41)**

நல்ல பாம்பை மகுடி ஊதி ஆட்டு விக்கின்ற பாம்பாட்டி, அந்தப் பாம்பினால் கடியுண்டு இறப்பான். யானையை வழி நடத்தி ஓட்டிச்செல்லும் யானைப் பாகன் அந்த யானையாலேயே கொல்லப்படுவான். இரவில் தனிவழியே வேறிடம் நோக்கிச் செல்கின்றவன் பிறரால் தொல்லைக்கு ஆளாகி இறந்து போக நேரிடும். ஓடுகின்ற காட்டாற்றில் நீச்சல் தெரியாமல் இறங்கி நீந்துகின்றவன் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவான். மணம் வீசும் மலர் சூடிய பரத்தையரை நாடி ஓடுகிறவன் அழிவான். அரசனைப் பகைத்துக்கொள்கிறவனும்அழிந்து போவான் என்கிறது இப்பாடல்.

**பழமொழி நானூறில் நிலையாமை**

**சிறந்ததம் சுற்றமும் செய் பொருளும் நீக்கித்**
**துறந்தார் தொடர்ப் பாடெவன் கொல்- கறங்கருவி**
**ஏனல்வாய்வீழும்மலைநாடஅஃதன்றோ**

**யானைபோய்வால்போகாவாறு**

**(முன்றுரைஅரையனார், பழமொழிநானூறு, பாடல்எண் 395)**

ஒலிக்கும் அருவிகள் தினைப்புனத்தில் விழும் மலை நாடனே ! சிறந்த தம்முடைய மக்களையும் தாம் ஈட்டிய பொருளையும் துறந்தவர்கள்

தம் உடல் மீது பற்றுடையவராய் இருப்பது ஏன்? அச்செயல் வாயிலில் யானை சென்ற பின் அதன் வாலானது போகாததைப் போன்றதாகும். இதில் உள்ள பழமொழி யானை போய் வால் போகாதவாறு ஆகும்.

**முடிவுரை**

நிலையாமை பற்றிய செய்திகள் உலகத்தில் அனைவருக்கும் பொருந்தும். `இந்த மனிதன் சாகும் போது எதையும் உடன் எடுத்துச் செல்வதில்லை. உலகையே கைப்பற்ற வேண்டும் என்று கருதிய அலெக்சாண்டர் சாகும் போது உடன் எதையும் எடுத்துச் செல்ல வில்லை என்பதை உணர்த்த அவரது கைகளை வெளியே நீட்டியவாறு உடலை எடுத்துச் செல்லுமாறு கூறினார். ருவன் எத்தனை நிலங்களை வைத்திருந்தாலும் அவன் சாகும் போது ஆறடி நிலம் மட்டுமே அவனுக்குச் சொந்தமாகிறது. எவ்வளவு அழகு சாதனப் பொருட்களையும் அணிகலன்களையும் உடலில் அணிந்திருந்தாலும் அவன் இறந்த பிறகு எரித்தால் கிடைப்பது ஒருகைப் பிடியளவு சாம்பல் தான். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்கிறது பழமொழி. நிலையானது என்று மனிதன் விலை பேசும் பொருட்கள் அவன் ஆயுள் உள்ள வரை மட்டுமே அனுபவிக்க முடியும்.

**துணைநூல்பட்டியல்**

1. தமிழ்வேட்பன், விவேகசிந்தாமணி(பாட்டும்-தெளிவுரையும்), ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, ஜனவரி 2023
2. தேனம்மைலஷ்மணன், வளையாபதி குண்டலகேசி மூலமும் உரையும், பாரதி பதிப்பகம், சென்னை, ஜனவரி- 2022
3. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும்உரையும், வர்த்தமானன்பதிப்பகம், சென்னை, டிசம்பர் 2022